**பீபல்ஸ் டிரவல்ஸ் பிரைவட் லிமிடட் நிறுவனம் - 2021/2022**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

பீபல்ஸ் டிரவல்ஸ் பிரைவட் லிமிடட் நிறுவனத்தின் (''கம்பனி'') 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் ஒன்று எனக்கு உதவியது.

கம்பனியின் 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடு என்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளபபடுகின்ற கணக்காயவில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவது இல்லை. பிறழ் கூற்றுக்கள் ஆனவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடும் என்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்தில் எடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர் தொழில் ஐயப்பாட்டினை பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனி தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெற வேண்டிய மற்றும் கொடுக்கவேண்டியவை

### 1.5.1 பெற வேண்டியவை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஸ) | மொத்த வியாபாரக் கடன்படுநரில் ரூபா.10,046,001 அல்லது 57 சதவிகிதம் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறத்தக்கவை மற்றும் மொத்த பெற வேண்டியவையில் ரூபா.3,611,080 அல்லது 20 சதவிகிதம் மக்கள் வங்கியிலிருந்து பெறத்தக்கவை. நிறுவனம் 15 நாட்கள் கடன் கொள்கையைக் கொண்டிருந்தாலும், ரூபா.17,646,938 (வியாபாரக் கடன்படுநரில்) 01 ஆண்டுக்கும் மேலாக நிலுவையாக உள்ள ரூபா.8இ686இ500 தொகையையும் உள்ளடக்கியிருந்தது மற்றும் நிறுவனத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் நிலுவைத் தொகையை வசூலிக்க முடியவில்லை. | கருத்திற் கொள்ளப்பட்டது, தற்போது முன்னிலைப்படுத்தப்பட்ட ஊழியர் கடன் நிலுவைத் தொகையானது ஏற்கனவே மீட்கப்பட்டுள்ளது மற்றும் தற்போதைய தொற்றுநோய் நிலைமை காரணமாக சில பெருநிறுவன கடனாளிகள் இன்னும் நிலுவையில் உள்ளனர். இன் நிலை இயல்பு நிலைக்குத் திரும்பியதும், அவை தீர்க்கப்பட்டு, பணம் செலுத்துவதற்கான எழுத்துப்பூர்வ நினைவூட்டல்களுக்குப் பதில்கள் பெறப்படும். மேலும்இ நாங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து, பணம் செலுத்துவதைப் பின்தொடர்கிறோம். | எந்தவொரு தாமதமும் இன்றி நிலுவைகளை மீட்டெடுப்பதை உறுதிசெய்ய, பின்தொடர்தல் நடைமுறைகளை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

(ஐ) ஊழியர் கடன் நிலுவைத் தொகையான ரூபா.2,868,261 ஆனது தனிப்பட்ட வாடிக்கையாளர்களைக் கையாளும் நபரின் பெயரில் ஒரு தனிப்பட்ட வாடிக்கையாளரின் பெறத்தக்க நிலுவையாக காட்டப்படடுள்ளது.

(ஐஐ) 2022 மார்ச் 31 இல் மொத்த ஊழியர் கடன் நிலுவைத் தொகையில் ரூபா.384,083 அல்லது 13 சதவீதம் 360 நாட்களுக்கு மேற்பட்டதாகும். மற்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த பெறத்தக்க நிலுவைகளை நிறுவனத்தால் வசூலிக்க முடியவில்லை.

### 1.5.2 கொடுக்கவேண்டியவை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **வுடு மீள் செலுத்த வேண்டியவை**<br>நிறுவன கொள்கையின் படி, மீள் செலுத்தும் வருமானம் 2 வருட காலத்திற்குள் வசூலிக்கப்படாவிட்டால், மற்றும் வாடிக்கையாளர் மின்னஞ்சல் மூலம் பணத்தைத் திரும்பப்பெற ஒரு நபரை பரிந்துரைக்கவில்லை என்றால் அல்லது வாடிக்கையாளர் தரப்பிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட நபர் தொடர்பு கொள்ளவில்லை என்றால், அது இலாபமாக கருதப்பட்டுவதுடன் இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்படும்.<br>எவ்வாறாயினும், 2 வருட காலத்திற்கு முன்னர் இடம்பெற்ற ரூபா.915,561 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்கள் ''வுடு மீள் செலுத்த வேண்டிய கணக்கில் செலுத்தப்படாமலேயே எஞ்சியுள்ளன. | குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் முன்னிலைப்படுத்தப்பட்ட மீள் செலுத்த வேண்டிய பணத்தைத் திரும்பப் பெறும் இலாபத்தை எடுத்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுப்பார். | நிறுவனத்தின் கொள்கைக்கு இணங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் |

### 1.6 ஆவணச் சான்றுகள் கணக்காய்வுக்கு கிடைக்கவில்லை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டு முதல் மக்கள் வங்கிக்கும் பீபல்ஸ் டிரவல்ஸ் பிரைவட் லிமிடட் நிறுவனத்திற்கும் இடையில் கட்டிடத்திற்கான முறையான குத்தகை ஒப்பந்தம் இருக்கவில்லை | குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மக்கள் வங்கியுடனான குத்தகை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் | அத்தகைய ஆவணங்கள் கிடைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

1.7 வரிப்பிரமாணங்களுக்கு இணங்காமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2019.்.20 நிதியாண்டிலிருந்து உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ஏயுவு மீதி ரூபா.453,695 நிலுவையாக இருந்தது. | குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் இது கவனத்தில் கொள்ளப்படும் மற்றும் கண்டிப்பாக கடைபிடிக்கப்படும். | எதிர்காலத்தில் தண்டபணம் ஏற்பாட்டை தவிர்ப்பதற்கு உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்துடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிவிளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா.6,500,086 தொகையான நட்டம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய நட்டம் ரூபா.23,212,868 தொகையானதால் நிதி விளைவுகளில் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா.16,712,782 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய ஆண்டு நிறுவனத்தின் நிதி விளைவுகளை பின்வரும் அட்டவணை சுருக்கமாகக் கூறுகிறது.

| விளக்கம் | 2022 ரூபா. | 2021 ரூபா. | வேறுபாட்டு அளவு அதிகரிப்பு (குறைவு) ரூபா. | வேறுபாடு % | மாற்றத்திற்கான காரணம். |
|---|---|---|---|---|---|
| <u>வருமானம்</u> | | | | | |
| தம்பதீவு.்.இந்திய சுற்றுலா மூலம் கிடைக்கும் வருமானம் | - | 26,098 | (26,098) | (100) | கொரோனா தாக்கம், மோசமான பொருளாதார நிலை மற்றும் வெளிநாட்டு சுற்றுலா ஏற்பாடுகளுக்கு டாலர்கள் கிடைக்காதது. |
| நிகர வருமானம்- விமான டிக்கெட் மீதான தரகு | 12,727,533 | 1,151,808 | 11,575,725 | 1,005 | வெளிநாட்டு சுற்றுப்பயணங்களுக்கான வாடிக்கையாளர்களின் வேண்டுகோளின் பேரில் கணிசமான எண்ணிக்கையிலான டிக்கெட்டுகளை முன்பதிவு செய்தல். |
| விசா மீதான நிகர தரகு | 529,166 | 12,409 | 516,757 | 4,164 | விசா சேவைகள் அதிகரிப்பு. |

**<u>செலவு</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விநியோக செலவுகள் | 171,726 | 139,284 | 32,442 | 23 | கடந்த ஆண்டை விட அடிக்கடி காகித விளம்பரங்கள் வெளியிடப்படுகிறது. |
| நிர்வாகச் செலவுகள் | 22,754,370 | 24,949,30 | (2,194,936) | (9) | ஜனவரி 2022 வரை சம்பளக் குறைப்பு, சில ஊழியர்களின் இராஜினாமா, ஆட்சேர்ப்புகளை இடைநிறுத்துதல் மற்றும் தொலைபேசி செலவுகளைக் குறைத்தல். |
| நிதிச் செலவு | 688,748 | 1,147,361 | (458,613) | (40) | குத்தகை கட்டத்திற்கான வட்டி குறைப்பு. |

**2.3 விகித பகுப்பாய்வு**

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டின் முக்கிய வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவின் சதவீதத்துடன் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| முக்கிய விகிதங்கள் | 2022 | 2021 |
|---|---|---|
| செயல்பாட்டு இலாப வரம்பு | (41.7மூ) | (1451.21மூ) |
| ே வரம்பு | (46.6மூ) | (1862.30மூ) |
| மூலதனத்தின் மீதான வருமானம் | (10.58மூ) | (36.76மூ) |
| சொத்துக்கள் மீதான வருமானம் | (6.77மூ) | (28.17மூ) |
| நடைமுறை விகிதம் | 1.5 | 3.20 |
| கடன் விகிதம் | 0.36 | 0.23 |
| மூலதனத்தின் மீதான கடன் விகிதம் | 0.56 | 0.30 |